
# நிலவுக்கு வீரர்களை அனுப்பியது நாசா

■ புளோரிடா

நிலவுக்கு கடைசியாக நாசா கடந்த 1971-ம் ஆண்டு அப்போலோ விண்கலம் மூலம் 3 வீரர்களை அனுப்பியது. 50 ஆண்டுக்கு பின் தற்போது ஆர்டெமிஸ்-2 திட்டத்தின் கீழ் எஸ்எல்எஸ் ராக்கெட் மூலம் ஓரியான் விண்கலத்தை நிலவுக்கு நாசா நேற்று பரிசோதனை முயற்சியாக அனுப்பியது. இந்த விண்கலத்தில் நாசா கமாண்டர் ரீட் வைஸ்மேன், பைலட் விக்டர் க்ளேவர், கிறிஸ்டினா கோச், கனடா விண்வெளி வீரர் ஜெரிமி ஹேன்சன் ஆகியோர் பயணம் செய்தனர்.

இந்த 4 வீரர்களும் 10 நாள் பயணம் மேற்கொண்டு நிலவை சுற்றி பயணம் செய்வர். ஆனால், நிலவில் தரையிறங்க மாட்டார்கள். அதற்கு பதில் நிலவைச் சுற்றி 6 லட்சம் மைல்கள் தூரம் பயணம் செய்து, நிலவின் மேற்பரப்பை படம் பிடிப்பர். மேலும் எதிர்கால திட்டங்களுக்கான முக்கிய தகவல்களை சேகரிப்பர். நிலவை சுற்றி வந்தபின் விண்கலம் பசிபிக் கடலில் வரும் 11-ம் தேதி பாராசூட் மூலம் விழும். அதை அமெரிக்க கடற்படையினர் மீட்பர்.



# இந்திய பெருங்கடலில் கடத்திய ரூ.100 கோடி ஹெராயின் பறிமுதல்

## 6 பேரை கைது செய்த இலங்கை கடற்படை

ராமேசுவரம்

இந்தி யப் பெருங் கடலில் மீன்பிடி படகில் கடத்திய ரூ.100 கோடி மதிப்பிலான 323 கிலோ எடையுள்ள ஹெராயின் போதைப் பொருளை இலங்கை கடற்படையினர் பறிமுதல் செய்து 6 பேரை கைது செய்தனர்.

சர்வதேச கடற்பகுதியில் போதைப் பொருட்களை கடத்திச் செல்லும் படகுகள் மற்றும் கப்பல்கள் பற்றி இலங்கை கடற்படையினர் தொடர்ந்து தேடுதல் நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றனர்.

இலங்கையின் தெற்குப் பகுதியிலுள்ள திக்கோவிட்டவில் இருந்து 60 கடல் மைல் தொலைவில் இந்தியப் பெருங்கடலில் சந்தேகத்துக்குரிய ஆழ்கடல் மீன்பிடி படகைக் கண்டனர். இதையடுத்து அந்தப்படகை இலங்கை கடற்படையினர் ரோந்து கப்பலில் சுற்றி வளைத்தனர்.

பின்னர் படகில் சோதனை செய்தபோது 298 பொட்டலங்களில் பதுக்கி வைத்திருந்த 323 கிலோ ஹெராயின் போதைப் பொருள் கண்டறியப்பட்டு பறிமுதல் செய்யப்பட்டன. இதன் சர்வதேச மதிப்பு ரூ.100 கோடி ஆகும். படகிலிருந்த இலங்கையைச் சேர்ந்த 6 பேரை கடற்படையினர் கைது செய்தனர்.

பறிமுதலான போதைப் பொருட்களுடன் 6 பேரையும் திக்கோவிட்ட கடற்படை முகாமுக்குக் கொண்டு சென்றனர். இந்தப் போதைப் பொருள் எங்கிருந்து கடத்தி வரப்பட்டது, கடத்தலில் தொடர்புடையோர் யார் என்பது குறித்து இலங்கை கடற்படையினர் விசாரித்து வருகின்றனர்.



பறிமுதல் செய்யப்பட்ட ஹெராயின் போதைப்பொருள் கடத்திய படகு.

### டிஜிட்டல் பரிவர்த்தனையில் புதிய உச்சம்

# மார்ச் மாதத்தில் 2,264 கோடி முறை யுபிஐ பணப்பரிமாற்றம்

புதுடெல்லி

நாட்டின் டிஜிட்டல் பணப் பரிவர்த்தனை தளமான யுபிஐ மூலம் கடந்த மார்ச் மாதத்தில் 2,264 கோடி முறை பரிவர்த்தனைகள் நடைபெற்றுள்ளன. இதன் மூலம் யுபிஐ பரிவர்த்தனை புதிய வரலாற்று உச்சத்தைத் தொட்டு சாதனை படைத்துள்ளது.

இது தொடர்பாக மத்திய நிதி அமைச்சகத்தின் கீழ் செயல்படும் நிதிச் சேவைகள் துறை தனது எக்ஸ் தளத்தில், "மார்ச் மாதத்தில் யுபிஐ வாயிலாக மேற்கொள்ளப்பட்ட பரிவர்த்தனைகளின் எண்ணிக்கை 2,264 கோடியை எட்டியுள்ளது. இதன் மதிப்பு ரூ.29.53 லட்சம் கோடியாகும். டிஜிட்டல் பரிவர்த்தனைகளை ஏற்றுக்கொண்டு, இந்த புரட்சியை முன்னெடுத்துச் செல்லும் இந்திய மக்களுக்கு நன்றி. நமது பணப்பரிவர்த்தனை முறையை மாற்றியமைக்கும் இந்தப் பயணம் தொடரட்டும்" என்று தெரிவித்துள்ளது.

UNIFIED PAYMENTS INTERFACE

கடந்த ஆண்டு இதே மார்ச் மாதத்தில் 1,830 கோடி பரிவர்த்தனைகள் நடைபெற்றிருந்த நிலையில், இந்த ஆண்டு அது 24 சதவீதம் வளர்ச்சியடைந்துள்ளது. கடந்த பிப்ரவரி மாதத்தில் 2,039 கோடியாக இருந்த பரிவர்த்தனைகள், தற்போது மார்ச் மாதத்தில் கணிசமாக உயர்ந்துள்ளன.

ரிசர்வ் வங்கியின் இரு முனைப் பாதுகாப்பு விதிமுறைகளைப் பின்பற்றி, எளிய மற்றும் பாதுகாப்பான முறையில் யுபிஐ செயல்படுகிறது. இதில் வங்கிக் கணக்குடன் இணைக்கப்பட்ட மொபைல் எண் மற்றும் ரகசிய பின் எண் ஆகிய இரு அடுக்கு பாதுகாப்பு வசதிகள் உள்ளதால் விரைவாகவும் பாதுகாப்பாகவும் பணத்தைப் பரிமாற்ற முடிகிறது.

தற்போது இந்தியாவின் ஒட்டுமொத்த டிஜிட்டல் பரிவர்த்தனைகளில் 85 சதவீதத்தை யுபிஐ பிடித்துள்ளது. தேசிய அளவைத் தாண்டி சர்வதேச அளவிலும் யுபிஐ தனது முத்திரையைப் பதித்து வருகிறது.

யுஏஇ, சிங்கப்பூர், பூடான், நேபாளம், இலங்கை, பிரான்ஸ் மற்றும் மொரிஷியஸ் ஆகிய ஏழு நாடுகளில் தற்போது நமது யுபிஐ சேவை நடைமுறையில் உள்ளது. ஐரோப்பிய நாடுகளில் முதல் நாடாக பிரான்ஸில் யுபிஐ அறிமுகப்படுத்தப்பட்டது ஒரு முக்கிய மைல்கல்லாக பார்க்கப்படுகிறது.

# நக்சலைட் பிரச்சினை: சாதித்துக் காட்டிய மத்திய அரசு!

இந்தியாவில் மாவோயிஸ்ட் / நக்சலைட் பிரச்சினை முடிவுக்கு வந்துவிட்டதாக நாடாளுமன்றத்தில் மத்திய உள் துறை அமைச்சர் அமித் ஷா அறிவித்திருப்பது பெரும் நிம்மதி அளிக்கிறது. இதனால், ஏராளமான உயிரிழப்புகளுக்கு முடிவு கட்டப்பட்டிருப்பதுடன், பல்வேறு முட்டுக்கட்டைகளுக்கு இலக்காகியிருந்த பழங்குடிக் கிராமங்களுக்கு விடிவுகாலம் பிறக்கும் என்னும் நம்பிக்கையும் ஏற்பட்டிருக்கிறது.

கடந்த பல ஆண்டுகளாக பிஹார், ஜார்க்கண்ட், சத்தீஸ்கர் உள்ளிட்ட பல மாநிலங்களின் 200க்கும் மேற்பட்ட மாவட்டங்களில் நக்சலைட் பிரச்சினை நீடித்துவந்தது. பழங்குடி மக்கள் வசிக்கும் மலைப் பகுதிகள் / காட்டுப் பகுதிகள், கனிம வளம் நிறைந்த பகுதிகளில் நீடித்த இந்தப் பிரச்சினையால் அப்பகுதி மக்களின் கல்வி, அடிப்படை வசதிகள் தொடங்கி, அந்தந்த மாநிலங்களின் வளர்ச்சிப் பணிகள்வரை பல அம்சங்களில் பாதிப்பு ஏற்பட்டது. பழங்குடி மக்களின் உரிமைகளுக்காகக் குரல் கொடுப்பதாக ஆயுதம் ஏந்தி வன்முறைச் செயல்களில் ஈடுபட்டுவந்த நக்சலைட்டுகள் சித்தாந்தரீதியில் பல்வேறு தொடர்புகளைக் கொண்டவர்கள் என்பதால், தீர்வு காண்பதில் பல்வேறு இடர்ப்பாடுகளும் நீடித்தன.

பல ஆண்டுகளாக மத்திய அரசும், சம்பந்தப்பட்ட மாநில அரசுகளும் இணைந்து இந்தப் பிரச்சினைக்குத் தீர்வுகாண முயன்றன. இதன் தொடர்ச்சியாக, பாஜக தலைமையிலான மத்திய அரசு நக்சலைட்டுகளுக்கு எதிராகப் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டுவந்தது. 2026 மார்ச் 31ஆம் தேதிக்குள் நக்சலைட்டுகள் முற்றிலுமாக ஒழிக்கப்படுவார்கள் என்று 2025 பிப்ரவரி 9இல் மத்திய உள் துறை அமைச்சர் அமித் ஷா அறிவித்தார்.

இதற்கான பணிகள் முடுக்கிவிடப்பட்டதன் சாட்சியமாக, மாவோயிஸ்ட் பிரச்சினை அதிகம் உள்ள பஸ்தர் பிராந்தியத்தில் உள்ள 100 கிராமங்களில், 2025 ஆகஸ்ட் 15 – சுதந்திர தினக் கொண்டாட்டம் நடைபெற்றதுடன், முதல் முறையாகத் தேசியக் கொடியும் ஏற்றப்பட்டது. 2024 மற்றும் 2026–க்கு இடைப்பட்ட காலத்தில் (மார்ச் வரை), 706 மாவோயிஸ்ட்டுகள் கொல்லப்பட்டனர். 2,218 பேர் கைது செய்யப்பட்டனர். 4,839 பேர் சரணடைந்தனர். இந்த நடவடிக்கையில் பாதுகாப்புப் படைகளைச் சேர்ந்த பலரும் உயிரிழந்திருக்கின்றனர்.

தற்போது இயங்கிவரும் மாவோயிஸ்ட்டுகளின் எண்ணிக்கை ஏறக்குறைய 50 ஆக இருக்கலாம் எனக் காவல் துறையினர் கருதுகின்றனர். அவர்களைத் தேடும் பணியும் தீவிரப்படுத்தப்பட்டிருக்கிறது. நக்சல் பிரச்சினையால் பாதிக்கப்பட்டிருந்த பகுதிகளில் 15,000 கி.மீ–க்குச் சாலைகள், 9,000க்கும் மேற்பட்ட செல்போன் கோபுரங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. பள்ளிகள், மருத்துவமனைகளும் தொடங்கப்பட்டிருக்கின்றன.

இது தடையின்றித் தொடர வேண்டுமானால், பழங்குடி மக்களின் நம்பிக்கையைப் பெறும் நடவடிக்கைகளை மத்திய – மாநில அரசுகள் முன்னெடுக்க வேண்டும். வன்முறை இயக்கத்தினரைச் சட்டத்தின் முன் நிறுத்த அந்தந்தப் பகுதிகளில் வசிக்கும் மக்களின் ஆதரவைப் பெறுவது அவசியம். ஆனால், ஏராளமான பழங்குடியினர் நக்சலைட்டுகளுக்கு உதவியதாகக் குற்றம்சாட்டப்பட்டுக் கடுமையான சட்டங்களின்கீழ் கைதுசெய்யப்பட்டுச் சிறையில் வாடுகிறார்கள். இவர்களில் பலர் மீதான வழக்குகளுக்குத் தகுந்த ஆதாரம் இல்லை என்கிற விமர்சனங்களைச் சமூகச் செயல்பாட்டாளர்கள் முன்வைக்கிறார்கள்.

# ஆயுதங்கள் ஏற்றுமதி ரூ.38,424 கோடியாக அதிகரிப்பு

**புதுடெல்லி**

கடந்த நிதியாண்டில் ஆயுத ஏற்றுமதி ரூ.38,424 கோடியாக அதிகரித்துள்ளதாக மத்திய அமைச்சர் ராஜ்நாத் சிங் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக மத்திய பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத் சிங் தனது சமூக வலைதளப் பக்கத்தில் நேற்று கூறியுள்ளதாவது:

2025-26-ம் நிதியாண்டில் நமது நாட்டிலிருந்து ரூ.38,424 கோடி மதிப்பிலான பாதுகாப்புத் தளவாடங்கள் பல்வேறு நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டன. இது முந்தைய நிதியாண்டைக் காட்டிலும் 62 சதவீதம் அதிகமாகும்.

இந்தியாவில் தயாரிக்கப்படும் பாதுகாப்புத் தளவாடங்களுக்கு உலக நாடுகளிடையே பெரிய அளவில் நம்பிக்கை ஏற்பட்டுள்ளது. இதனால்தான் நமது நாட்டிலிருந்து பாதுகாப்புக் கருவிகள் ஏற்றுமதியும் முன்பைவிட அதிகரித்துள்ளது. பாதுகாப்புத் தளவாட பிரிவில் ரூ.38,424 கோடி அளவுக்கு இதுவரை ஏற்றுமதியே நடந்ததில்லை. இது ஒரு மைல்கல் சாதனையாகும்.

முந்தைய நிதியாண்டைக் காட்டிலும் ரூ.14,802 கோடி கூடுதலாக ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது. இதில் 54.84 சதவீதம் பொதுத்துறை பாதுகாப்பு நிறுவனங்களில் இருந்தும், 45.15 சதவீதம் தனியார் நிறுவனங்களில் இருந்தும் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது. இது பொதுத்துறை-தனியார் கூட்டு மற்றும் தற்சார்புடைய பாதுகாப்புச் சூழலமைப்பின் வல்லமையை வெளிப்படுத்துகிறது.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

---

புகழ்பெற்ற இந்திய ஓவியர் ராஜா ரவிவர்மாவின்

# யசோதா, கிருஷ்ணா வண்ண ஓவியம் ஏலத்தில் ரூ.167 கோடிக்கு விற்பனை

**புதுடெல்லி**

புகழ்பெற்ற இந்திய ஓவியர் ராஜா ரவிவர்மாவின் யசோதா மற்றும் கிருஷ்ணா வண்ண ஓவியம் ரூ.167 கோடிக்கு விற்பனையாகி உள்ளது.

சர்வதேச முன்னணி ஏல நிறுவனமான 'சுஃப்ரான் ஆர்ட்' சார்பில் வசந்தகால நேரடி ஏலம் மும்பையில் நேற்று முன்தினம் நடைபெற்றது. இதில் புகழ்பெற்ற இந்திய ஓவியர் ராஜா ரவிவர்மாவின் யசோதா மற்றும் கிருஷ்ணா வண்ண ஓவியம் ரூ.167.2 கோடிக்கு விற்பனை செய்யப்பட்டது. இதன் மூலம் ஏலத்தில் விற்பனை செய்யப்பட்ட நவீன இந்தியக் கலையின் மிக உயர்ந்த மதிப்புமிக்க படைப்பாக இது உருவெடுத்துள்ளது.

கடந்த ஆண்டு நடைபெற்ற ஏலத்தில் சுமார் ரூ.118 கோடிக்கு விற்பனையான எம்.எஃப். ஹுசைனின் 'பெயரிடப்படாத (கிராம் யாத்ரா)' ஓவியத்தின் சாதனையை இந்தப் படைப்பு முறியடித்துள்ளது.

ரூ.80 கோடி முதல் ரூ.120 கோடி வரை மதிப்பிடப்பட்ட இந்த ஓவியத்தை, சீரம் இன்ஸ்டிடியூட் ஆஃப் இந்தியா நிறுவன நிர்வாக இயக்குநர் டாக்டர் சைரஸ் எஸ்.பூனாவாலா வாங்கியுள்ளார்.

இதுகுறித்து பூனாவாலா கூறும்போது, "ராஜா ரவிவர்மாவின் ஓவியத்தைப் பாதுகாக்கும் வாய்ப்பு கிடைத்ததை நான் பெருமையாகக் கருதுகிறேன். இந்த தேசியச் செல்வம் அவ்வப்போது பொதுமக்களின் பார்வைக்கு வைக்கப்பட வேண்டும், அதைச் செயல்படுத்த நான் முயற்சிப்பேன்" என்றார்.

### 1890-களில் வரைந்தது

1890-களில், ரவிவர்மா கலைப் பயணத்தின் உச்சத்தில் இருந்தபோது இந்த ஓவியம் வரையப்பட்டது. யசோதை பசுவிடம் பால் கறப்பதையும், குழந்தை கிருஷ்ணன் பின்னால் இருந்து ஒரு கிண்ணத்தில் பாலை எடுக்க முயற்சிப்பதையும் இந்த ஓவியம் சித்தரிக்கிறது. இது ரவிவர்மாவின் மிகவும் குறிப்பிடத்தக்க படைப்புகளில் ஒன்றாகக் கருதப்படுகிறது.

# ஹார்முஸ் ஜலசந்தியை திறப்பது தொடர்பாக பிரிட்டன் தலைமையில் 40 நாடுகள் ஆலோசனை

லண்டன்

ஹார்முஸ் ஜலசந்தியில் தடையற்ற சரக்கு கப்பல் போக்குவரத்தை உறுதி செய்வது தொடர்பாக பிரிட்டன் தலைமையில் 40 நாடுகள் நேற்று முக்கிய ஆலோசனை நடத்தின.

அமெரிக்கா, இஸ்ரேல் கூட்டுப் படைகள் மற்றும் ஈரான் ராணுவத்துக்கு இடையே போர் நடைபெற்று வருகிறது. இதனால் ஹார்முஸ் ஜலசந்தியை ஈரான் ராணுவம் முழுமையாக மூடியிருக்கிறது. இதனால் சவுதி அரேபியா, கத்தார், ஐக்கிய அரபு அமீரகம், குவைத் உள்ளிட்ட வளைகுடா நாடுகளின் கச்சா எண்ணெய், எரிவாயு ஏற்றுமதி முடங்கியிருக்கிறது. இதனால் உலகம் முழுவதும் எரிபொருள், எரிவாயுவுக்கு கடும் தட்டுப்பாடு ஏற்பட்டிருக்கிறது.

இந்த சூழலில் ஹார்முஸ் ஜலசந்தியில் தடையற்ற சரக்கு கப்பல் போக்குவரத்தை உறுதி செய்வது தொடர்பாக பிரிட்டன் தலைமையில் 40 நாடுகளின் பிரதிநிதிகள் நேற்று காணொலி வாயிலாக முக்கிய ஆலோசனை நடத்தினர். பிரிட்டிஷ் வெளியுறவு அமைச்சர் யெவெட் கூப்பர் கூட்டத்துக்கு தலைமை வகித்தார். பிரான்ஸ், ஜெர்மனி, இத்தாலி, கனடா, ஆஸ்திரேலியா, ஐக்கிய அரபு அமீரகம் உட்பட 30-க்கும் மேற்பட்ட நாடுகளின் அமைச்சர்கள், பிரதிநிதிகள் கூட்டத்தில் காணொலி வாயிலாக பங்கேற்றனர். இக்கூட்டத்தை அமெரிக்கா புறக்கணித்தது.

அப்போது பிரிட்டிஷ் பிரதமர் கெய்ர் ஸ்டார்மர் கூறும்போது, "ராணுவ நடவடிக்கை இல்லாமல் ஹார்முஸ் ஜலசந்தியை திறக்க ராஜ்ஜியரீதியிலான முயற்சிகளை மேற்கொள்வது அவசியம். இதற்கு சாத்தியமுள்ள அனைத்து வழிகளையும் ஆராய்வோம்" என்று தெரிவித்தார்.

ஈரானுக்கு எதிரான போரில் அமெரிக்காவுடன் இணைய ஐரோப்பிய நாடுகள் மறுத்துவிட்டன. இதனால் அமெரிக்காவுக்கும் ஐரோப்பிய நாடுகளுக்கும் இடையே விரிசல் ஏற்பட்டிருக்கிறது. உக்ரைன் போர் காரணமாக ரஷ்யாவிடம் இருந்து எரிபொருள், எரிவாயு வாங்குவதை ஐரோப்பிய நாடுகள் கடந்த 2022-ம் ஆண்டில் நிறுத்திவிட்டன.

தற்போது நார்வே, அமெரிக்கா உள்ளிட்ட நாடுகள் ஐரோப்பாவின் எரிபொருள் தேவையை பூர்த்தி செய்து வருகின்றன. எனினும் போலந்து, இத்தாலி உள்ளிட்ட நாடுகள் தங்களின் எரிபொருள் தேவைக்கு வளைகுடா நாடுகளை நம்பி உள்ளன.

## இந்தியா பங்கேற்பு

இந்திய வெளியுறவுத் துறை செய்தித் தொடர்பாளர் ரந்தீர் ஜெய்ஸ்வால் டெல்லியில் நேற்று நிருபர்களிடம் கூறும்போது, "ஹார்முஸ் ஜலசந்தி தொடர்பான ஆலோசனைக் கூட்டத்தில் பங்கேற்க பிரிட்டிஷ் அரசு சார்பில் இந்தியாவுக்கு அழைப்பு விடுக்கப்பட்டது. இதையேற்று இந்திய வெளியுறவுச் செயலாளர் ஆலோசனைக் கூட்டத்தில் பங்கேற்பார்" என்று தெரிவித்தார். இதன்படி டெல்லியில் இருந்து வெளியுறவுச் செயலாளர் விக்ரம் மிஸ்ரி காணொலி வாயிலாக கூட்டத்தில் கலந்து கொண்டார். மத்திய கிழக்கில் போரை முடிவுக்கு கொண்டு வர வேண்டும். ஹார்முஸ் ஜலசந்தியில் தடையற்ற சரக்கு கப்பல் போக்குவரத்தை உறுதி செய்ய வேண்டும் என்று அவர் வலியுறுத்தினார்.